# செங்கல்பட்டு நகராட்சி

## அவசரக் கூட்டம்

**2020ம் ஆண்டு ஜுலை மாதம் 15ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.**

செங்கல்பட்டு நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2020–2021–ம் நிதி திட்டத்தின்கீழ் கீழ் கண்ட விவரப்படியான பணிகள் மேற்கொள்ள சிப்பம் 1–க்கு ரூ.200.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்ட ஒதுக்கீடு தொகையில் 25% சதவீத தொகை ரூ.50.00 இலட்சம் நகராட்சி பங்கு தொகையில் மேற்கொள்ள நகர் மன்ற ஒப்புதல் பெற்று அனுப்ப கோரியுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்.17349/2019/இ3, நாள்.14.07.2020 மன்ற பார்வைக்கும், நகராட்சி பங்கு தொகை ரூ.50.00 இலட்சம் பங்கு தொகை செலவிட மன்ற அனுமதிக்கும்.

| வ.எண் | வேலையின் பெயர் | திட்ட ஒதுக்கீடு தொகை | சாலைகளின் நீளம் | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.7 கைலாசநாதர் கோயில் தெரு, வார்டு எண்.32 அழகேசநகர், வார்டு எண்.30 பழைய GST ரோடு மற்றும் தொடர்ச்சி, குறிஞ்சி தெரு, வார்டு எண்.33 அண்ணா நகர் 6வது மற்றும் 10வது குறுக்கு தெரு | ரூ.200.00 இலட்சம் | 2.100 கி.மீ | ரூ.150.00 இலட்சம் | ரூ.50.00 இலட்சம் |

அ.கு–

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. நகராட்சி பங்கு தொகையான 25% சதவீதத்தை நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.1094 நாள் 15.07.2020**

அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் (ம) ஆணையர்,
செங்கல்பட்டு நகராட்சி

# செங்கல்பட்டு நகராட்சி

## சாதாரண கூட்டம்

**2020ம் ஆண்டு ஜுலை மாதம் 31ம் தேதி பிற்பகல் 11.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.**

பொருள்–1

செங்கல்பட்டு நகராட்சியில் 2020–2021 க்கு அத்தியாவசிய பணிகளுக்கு தேவையான எழுதுப்பொருட்கள் (ம) பதிவேடுகள் தற்போது இருப்பில் இல்லாத காரணத்தால் அவசர அவசியனிமித்தம் பதிவு பெற்ற அரசு நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி கோரி வாங்கவும் இதற்கான தோராயான செலவினம் ரூ.700000/– ஏழு இலட்சத்திற்க்கு மட்டும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

1. அனுமதி அளிக்கலாம்

2.அத்தியாவசிய தேவை என்பதால் அவசர அவசியனிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களையும் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.1562/2020/பி2**

**தீர்மான எண்.1095 நாள் 31.07.2020**
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–2

இந்நகராட்சி பணியாளர்களுக்கு 2020–2021 க்கு தேவையான எழுதுப்பொருள் (ம) பதிவேடுகள் தற்போது இருப்பில் இல்லாத காரணத்தால் அவசர அவசியம் கருதி சப்ளை செய்ய பதிவு பெற்ற அரசு நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் அதில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது இதனை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | **No** | **A4 Enterprises paduanchercy Chennai-126** | ஜார்ஜ் டவுன் பலநோக்கு தொழில் கூட்டுறவு | **PK enterprises pammal Chennai-78** |
|---|---|---|---|---|---|

| | | | | சங்கம் | |
|---|---|---|---|---|---|
| 1 | A4 paper | 1 | 380.00 | 385.00 | 375.00 |
| 2 | A3 paper | 1 | 480.00 | 485.00 | 475.00 |
| 3 | Pencil box | 1 | 8.50.00 | 9.00 | 8.00 |
| 4 | Balpen | 1 | 16.00 | 18.00 | 15.00 |
| 5 | 1 Quare register | 1 | 260.00 | 260.00 | 250.00 |
| 6 | Tag | 1 | 235.00 | 230.00 | 225.00 |
| 7 | Printer ribbon | 1 | 595.00 | 595.00 | 590.00 |
| 8 | Stamp pad big | 1 | 130.00 | 130.00 | 128.00 |
| 9 | Attendance register | | 360.00 | 360.00 | 350.00 |
| 10 | Investment register | 1 | 1650.00 | 1650.00 | 1600.00 |
| 11 | 12 A Toner | 1 | 6580.00 | 6580.00 | 6500.00 |
| 12 | PF register | 1 | 1870.00 | 1880.00 | 1800.00 |
| 13 | Cash book | 1 | 610.00 | 640.00 | 600.00 |
| 14 | Deposit register | 1 | 1890.00 | 1880.00 | 1800.00 |
| 15 | Rubber band | 1 | 220.00 | 220.00 | 200.00 |
| 16 | Running note file | 1 | 300.00 | 300.00 | 290.00 |
| மொத்தம் | | | **15584.5.00** | **15622.00** | **15206.00** |

மேற்படி வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வ.எண் 5–ல் உள்ள P.K.Enterprises பம்மல் சென்னை–78 என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அத்தியாவசிய தேவை என்பதால் அவசர அவசியத்தினிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.1562/2020/பி2**

**தீர்மான எண்.1096 நாள் 31.07.2020**

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–3

செங்கல்பட்டு நகராட்சியில் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் ஈர்ப்பு வாகனம் TN.19 J 3325 என்ற வாகனத்திற்கு இன்சூரன்ஸ் காலம் முடிவடைவதால் 2020–21 ம் ஆண்டிற்கு இன்சூரன்ஸ் (காப்பீடு) கீழ் கண்ட விவரப்படி The Oriental Insurance Company Limited என்ற நிறுவனத்திற்கு காசோலையாக செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வாகன எண் | காப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | TN.19 J 3325<br>ஈர்ப்பு வாகனம் | 12,361/– |

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசியத்தை முன்னிட்டு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிப் பெற்று தொகை செலுத்திட நடவடிக்கை மேற்கொண்டதற்கு அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1765/2017/இ1**

**தீர்மான எண்.1097 நாள் 31.07.2020**
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–4

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு சம்பந்தமாக பல முன்னேற்பாடுகளை செய்து வார்டுகளில் கீழ்கண்ட அத்தியாவசிய பொருட்கள் ஹோமியோபதி மாத்திரைகள் தற்போது இருப்பில் இல்லாத காரணத்தால் நகராட்சிளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் குறுகிய கால விலைப்புள்ளி மூலம் பெறப்பட்டு பயன்படுத்த பட்டதற்கு உண்டான பில் தொகையினை திரு. **Dr.Aru'S Holistic Homoeocare** என்பருக்கு வழங்கபட்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருளின் விவரம் | | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | | |
|---|---|---|---|---|---|
| | | | **Dr.Aru'S Holistic Homoeocare** | **Dr.S.Ponni Homoeopathic Physician** | **Srivari Homoeo Pharmacy** |
| 1 | | **Qty** | **Price** | **Price** | **Price** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | HOMOEOPATHIC IMMUNE BOOSTER ABSENICUM ALBUM 30C 1 DRAM-40 SIZE PILLS | 17000 (Drams) | Rs.20 (One Dram) | Rs.25 (One Dram) | Rs.30 (One Dram) |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. **Dr.Aru'S Holistic Homoeocare** குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

**அ.கு–**

மேற்படி செலவினம் அவசர அவசியத்தின் நிமித்தம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் **1920**பிரிவு **15–**ன் கீழ் செலவிடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.491/2020/எச்1**

**தீர்மான எண்.1098 நாள் 31.07.2020**
அனுமதிக்கப்பட்டது.

**bghUŸ-5**

தமிழக அரசு மூலம் வெளியிடப்படும் அறிவிக்கைகள் மற்றும் வழிகாட்டுதலின் அடிப்படையிலும், அரசு செயலாளர், பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகளின் படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை **28** அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.**5437/ஜெ1/2020** நாள் **15.03.2020**ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகள் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படியும், இந்நகராட்சி பகுதியில் **"கொரோனா வைரஸ்"** தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக நகராட்சி எல்லைக்குட்பட்ட தடை செய்யப்பட்ட பகுதிகள், மக்கள்அதிகம் கூடும் இடங்கள், அரசு அலுவலகங்கள், சமுதாய கூடங்கள், சமுதாய பொது கழிப்பிடங்கள், நியாய விலை அங்காடி கட்டிடங்கள், வங்கிகள், வங்கி ஏடிஎம்கள், மக்கள் அதிகம் கூடும் சாலைகள், மின் துறை அலுவலகங்கள், அஞ்சல் அலுவலகங்கள், பூங்காக்கள் போன்ற இடங்களில் மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை வீதம் ஐந்து முறை கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் நோய் தொற்று கூடுதலாக ஏற்பட்டு வருவதை தொடர்ந்து, மாவட்ட ஆட்சியரின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி கிருமி நாசினிகள் தெளித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளதன் பேரில் உரிய பாதுகாப்பு கவசங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கு இப்பணியினை செயல்படுத்துவது அவசியமாகிறது.

| வ.எண் | விவரம் | தேவைப்படும் அளவு |
|---|---|---|
| 1 | Bleaching Powder | 3500 Kgs |
| 2 | Lime Powder | 3000 Kgs |
| 3 | Mask | 10000 Nos |
| 4 | Lyzol | 3000 Nos |
| 5 | Reusable Gloves | 2000 Nos |
| 6 | Hypo chloride Liquid | 3000 Ltrs |
| 7 | Hand Wash | 100 Ltrs |

மேலும், இப்பணிகளை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த இயலாத சூழ்நிலையில்,அவசர அவசியம் கருதி **1920**ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு **15**ன் கீழ் நகராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைப்புள்ளிகள்பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.**8.60** இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு-

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால்,**1920**ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு **15**ன் கீழ் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.491/2020/எச்1**

**தீர்மான எண்.1099 நாள் 31.07.2020**
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–**6**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு சம்பந்தமாக பல முன்னேற்பாடுகளை செய்து வார்டுகளில் மேற்கொள்ளவும் இவற்றை கட்டுப்படுத்தவும் Fingertrip Pulse Oximeter கருவி வாங்கி வழங்கிட வேண்டப்படுகிறது நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **15**–ன் கீழ் குறுகிய கால விலைப்புள்ளி மூலம் பெறப்பட்டு பயன்படுத்த பட்டதற்கு உண்டான பில் தொகையினை திரு. நகராட்சி ஒப்பந்ததாரர் என்பருக்கு வழங்கபட்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| S.No | Company Name & Address | Price List | Per Unit Rs | GST 12% | Total Price |
|---|---|---|---|---|---|
| 1 | Phoenix Global Ventures, Mylapore, Chennai-600004 | Pulse Oximeter | 1520.00 | 182.00 | 1702.00 |
| 2 | HI Tech Green India,CIT Colony, Mylapore, Chennai-600004 | Pulse Oximeter | 1940.00 | 233.00 | 2173.00 |
| 3 | United Trading Co,No.25,Mandapam Road,Kilpauk, Chennai-600010 | Pulse Oximeter | 1730.00 | 208.00 | 1938.00 |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. **Phoenix Global Ventures**, ஒப்பந்ததாரர் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

அ.கு—

மேற்படி செலவினம் அவசர அவசியத்தின் நிமித்தம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920பிரிவு 15—ன் கீழ் செலவிடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.491/2020/எச்1**

**தீர்மான எண்.1100 நாள் 31.07.2020**
அனுமதிக்கப்பட்டது.

பொருள்—7

செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகம் சார்பில் வரும் சுதந்திர தினம் (2020) ஆகஸ்டு 15—ன் புதியதாக கட்டப்பட விருக்கும் மாவட்ட ஆட்சியரக வளாக மைதானமான ITI வளாகத்தில் நடைபெற உள்ளதால் அவ்விடத்தில் காவல் துறை, வருவாய் துறை, பள்ளி கல்வி துறை மற்றும் பிற துறைகளை சாந்தவர்கள் மூலம் முன் ஒத்திகை நிகழ்ச்சி நடைெ பற உள்ளதால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்ததற்கிணங்க தற்காலிக கழிப்பிட வசதி செய்து தர உத்தேச செலவினம் ரூ.50,000/— ஆகும். நகராட்சியின் பொது நிதியில் மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றப் பொருள் வைக்க அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

அ.கு—

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மன்றத்தின் அனுமதி எதிர் நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.844/2020/இ1**

**தீர்மான எண்.1101 நாள் 31.07.2020**
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–8

செங்கல்பட்டு நகராட்சி அருகில் உள்ள செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகம் சார்பில் வரும் சுதந்திர தினம் (2020) ஆகஸ்டு 15–ல் புதியதாக கட்டப்பட விருக்கும் மாவட்ட ஆட்சியராக வளாக மைதானமான ITI வளாகத்தில் நடைபெற உள்ளதால். முன் ஒத்திகை நிகழ்ச்சியில் பங்கு பெறும் துறை அலுவலகள் மற்றும் பொது மக்கள் பயன்படும் வகையில் நவீன கழிப்பிட வசதி கொண்ட மொபைல் டாய்லெட் (Portable mobile toilet) அமைக்கும் பணிக்கு ரூ.50,000/– ஆயிரத்திற்கு 07.08.2020 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் பின் வருமாறு.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் ரூ.(இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி மாவட்ட ஆட்சியரால் (ITI) வளாகத்தில் நடைபெறும் சுதந்திர தின விழாவிற்கு தற்காலிக கழிவறை அமைக்கும் பணி. | ரூ.0.50 இலட்சம் | திரு.S.K.Sanitaz மதிப்பீட்டு விலை விகிதம் |
| | | | திரு.Leo polymeo & Enterprices 4.61% மதிப்பீட்டு விலை விகிதம் அதிகம் |

மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.844/2020/இ1**

**தீர்மான எண்.1102 நாள் 31.07.2020**
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–9

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தாக்காத வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டி அனைத்து பகுதிகளிலும் 70 DBC பணியாளர்களை கொண்டு கிருமி நாசினி(Disinfectant Solution) மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. இப்பணியினை மேற்கொள்ளும் 70 DBC பணியாளர்களை வெளி கொணர்வின் மூலம் தனியார் வசம் இருந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்நகரில் நோய் பரவாமல் இருக்க இப்பணியாளர்களின் பணி மிக முக்கியம் வாய்ந்த பணி என்பதாலும், அத்தியாவசிய பணி என்பதாலும் இவர்களை மேலும் இப்பணிக்கு பயன்படுத்த வேண்டி திரு.K.ராஜ கோபால் ஒப்பந்ததாரருக்கு ஒரு மாத காலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விலை விகிதத்தின்படி பணி உத்திரவு நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் 70 DBC பணியாளர்களுக்கு 1 மாதத்திற்கு 11.07.2020 முதல் 10.08.2020 முடிய உள்ள காலங்களுக்கு வழங்க வேண்டிய ஊதியம் மற்றும் பிடித்தம் செய்ய வேண்டிய தொகை ஆகியவற்றிற்கு செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரீக்கலாம்.

**ந.க.எண்.491/2020/எப்1**

**தீர்மான எண்.1103 நாள் 31.07.2020**
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–10

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தாக்காத வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டி அனைத்து பகுதிகளிலும் 70 DBC பணியாளர்களை கொண்டு கிருமி நாசினி(Disinfectant Solution) மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. இப்பணியினை மேற்கொள்ளும் 70 DBC பணியாளர்களை வெளி கொணர்வின் மூலம் தனியார் வசம் இருந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்நகரில் நோய் பரவாமல் இருக்க இப்பணியாளர்களின் பணி மிக முக்கியம் வாய்ந்த பணி என்பதாலும், அத்தியாவசிய பணி என்பதாலும் இவர்களை மேலும் இப்பணிக்கு பயன்படுத்த வேண்டி திரு.K.ராஜ கோபால் ஒப்பந்ததாரருக்கு ஒரு மாத காலத்திற்கு 11.06.2020 முதல் 10.07.2020 வரை ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விலை விகிதத்தின்படி பணி உத்திரவு நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.491/2020/எப்1**

**தீர்மான எண்.1104 நாள் 31.07.2020**

அனுமதிக்கப்பட்டது.

பொருள்-11

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தொற்று அதிகமாக அதாவது தமிழ்நாடு மாநிலங்கள் அளவில் இரண்டாவது இடத்தில் இருப்பதால் பொது மக்களுக்கு போதிய பாதுகாப்பு மற்றும் தேவையான முன்னேற்பாடு பணிகள் செய்ய **16.06.2020** அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு அவர்கள் இந்நகரினை நேரில் ஆய்வு செய்ததின் பேரில் கூடுதலாக **20** களபணியாளர்கள் உடன் நியமிக்க வேண்டி இருந்ததால் இந்த **20** நபர்களை DBC பணியாளராக பணிக்கு எடுத்து அவசர தேவைக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள். இவ்வாறு நியமிக்கப்பட்ட **20** நபர்களுக்கு **17.06.2020** முதல் **30.06.2020** முடிய உண்டான தொகையினை மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு கீழ் கண்டுள்ளவாறு கணக்கிடப்பட்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் **1920**-ன் படி நடவடிக்கை **15**-ன் கீழ் வழங்கவும். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கு செய்யவும் ஆணையர் அவர்களின் உத்திரவு வேண்டப்படுகிறது.

ஒரு நபருக்கு தினக்கூலி – **464.00**

| | |
|---|---|
| மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் | 20X464 |
| **17.06.2020** முதல் **30.06.2020** முடிய **14** நாட்களுக்கு | **ரூ.127600.00** |

அ.கு-

மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.491/2020/எப்1**

**தீர்மான எண்.1105 நாள் 31.07.2020**
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–12

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தாக்காத வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டி அனைத்து பகுதிகளிலும் 70 DBC பணியாளர்களை கொண்டு கிருமி நாசினி(Disinfectant Solution) மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. இப்பணியினை மேற்கொள்ளும் 70 DBC பணியாளர்களை வெளி கொணர்வின் மூலம் தனியார் வசம் இருந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்நகரில் நோய் பரவாமல் இருக்க இப்பணியாளர்களின் பணி மிக முக்கியம் வாய்ந்த பணி என்பதாலும், அத்தியாவசிய பணி என்பதாலும் இவர்களை மேலும் வெளிகொணர்வு மூலமாக பணி செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி வழங்க மன்றப் பொருள் வைக்கவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றப் பொருள் வைக்க ஆணையரின் ஒப்புதலுக்கு.

அ.கு:–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரீக்கலாம்.

ந.க.எண்.491/2020/எப்1

**தீர்மான எண்.1106 நாள் 31.07.2020**
அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் (ம) ஆணையர்,
செங்கல்பட்டு நகராட்சி